நிலச்சீர்திருத்தத் துறை

அனுப்புநர்	பெறுநர்
திருமதி எம்.பி. நிர்மலா, இ.ஆ.ப, நிலச்சீர்திருத்த ஆணையர், சேப்பாக்கம், சென்னை–5	1) கல்லூரிக் கல்வி இயக்குநர், சென்னை 6 (இணைப்புடன்)

2) வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி ஆணையர், கிண்டி, சென்னை 25 (இணைப்புடன்)

3) தொழில் நுட்பக் கல்வி இயக்குநர், சென்னை 25 (இணைப்புடன்)

4) மருத்துவ கல்வி இயக்குநர், கீழ்ப்பாக்கம், சென்னை 10 (இணைப்புடன்)

5) சட்டக் கல்வி இயக்குநர், புரசைவாக்கம் நெடுஞ்சாலை, கீழ்ப்பாக்கம், சென்னை 10 (இணைப்புடன்)

6) பதிவாளர், தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைகழகம், மாதவரம், சென்னை (இணைப்புடன்)

7) பதிவாளர், தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் (இணைப்புடன்)

8) பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு இயக்குநர், டி.எம்.எஸ். வளாகம், தேனாம்பேட்டை, சென்னை 6 (இணைப்புடன்)

<u>நக.எண்.ஒ2/9925/2011 (நிசீ), நாள் 3.10.2011</u>

அய்யா,

பொருள்: நலத்திட்டம் - விவசாயத் தொழிலில் ஈடுபட்டுள்ள குறு/சிறு விவசாயிகள் மற்றும் விவசாயத் தொழிலாளர்கள் ஆகியோரது குழந்தைகளுக்கு முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் கூடுதலாக கல்வி உதவித் தொகை வழங்குவது – தொடர்பாக.

பார்வை: அரசாணை (நிலை) எண்.265, வருவாய் (நி.சீர்.1(2)துறை, நாள்.10.09.2011.

****

Verified RealEstate™

பார்வையிற் கண்ட அரசாணையின் மீது தங்களது கவனம் கொணரப்படுகிறது (நகல் இணைக்கப்பட்டுள்ளது).

2. பார்வையிற் கண்ட அரசாணையில், ஏற்கனவே செயல்படுத்தப்பட்டு வந்த தமிழ்நாடு விவசாய தொழிலாளர்கள் – விவசாயிகள் (சமூக பாதுகாப்பு மற்றும் நலம்) திட்டம் 2006க்குப் பதிலாக, "முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத்திட்டம்" செயல்படுத்த ஆணையிடப்பட்டுள்ளது. இப்புதிய திட்டத்தின் கீழ் உறுப்பினராக உள்ள, அதாவது 2.50 ஏக்கருக்கு மேற்படாத நன்செய் நிலம் அல்லது 5.00 ஏக்கருக்கு மேற்படாத புன்செய் நிலம் வைத்துள்ள விவசாயிகள், குத்தகைதாரர்கள் மற்றும் விவசாய தொழிலாளர்கள் ஆகியோர்களின் குழந்தைகளுக்கு வழங்கப்படும் கல்வி உதவித்தொகை விவரம் இத்துடன் இணைத்தனுப்படுகிறது.

3. மேலும், இப்புதிய திட்டத்தின்படி, வேறு எந்தத் துறையிலாவது கல்விக்கான நிதி உதவி பெற்றாலும் மேற்சொன்ன குழந்தைகளுக்கு இத்திட்டத்தின்கீழ் கல்வி உதவியானது கூடுதலாக அமையும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

4. எனவே, இவ்விவரத்தினை தங்கள் துறையின் கட்டுப்பாட்டிலுள்ள அனைத்து கல்வி நிறுவனங்களின் முதல்வர்களுக்கு சுற்றறிக்கையின் மூலம் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். மேலும், விவசாயிகள் மற்றும் விவசாய தொழிலாளர்களின் குழந்தைகள் பயன்பெறும் வகையில், அவர்கள் கல்வி பயிலும் மேற்படி கல்வி நிறுவனத்தில் கல்வி பயிலுவதற்கான சான்றினை அக்கல்வி நிறுவனத்தின் முதல்வர் (Principal) அல்லது துறைத் தலைவர் (HOD) சம்பந்தப்பட்ட மாணவ / மாணவிகளுக்கு வழங்கலாம் என்றும், அவர்களது பெற்றோர் அச்சான்று மற்றும் அவர்களது அடையாள அட்டை நகலுடன் சம்பந்தப்பட்ட வட்டாட்சியர் அலுவலகத்திலுள்ள தனி வட்டாட்சியர் (சமூக பாதுகாப்புத் திட்டம்) இடம் விண்ணப்பித்தால், மேற்படி கல்விக்கான உதவித்தொகை வழங்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, இவ்வுதவித்தொகையினை சம்பந்தப்பட்ட மாணவ / மாணவியர்கள் பெறுவதை ஊர்ஜிதம் செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

தங்கள் உண்மையுள்ள,
ஒம்/ எம்.பி. நிர்மலா
நிலச்சீர்திருத்த ஆணையர்

/உண்மை நகல்/

நகல்: 1) அரசு முதன்மைச் செயலாளர்,
வருவாய்த்துறை
சென்னை – 600 009.

2) அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்
(சென்னை நீங்கலாக).

3) இருப்புக் கோப்புக்கு

Verified RealEstate

முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம்

கல்விக்கான உதவித் தொகை

வ.எண்.	கல்வி விவரம்	விடுதியில் தங்காதோர்		விடுதியில் தங்குவோர்	
		ஆண் ரூ.	பெண் ரூ.	ஆண் ரூ.	பெண் ரூ.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
1.	தொழிற்பயிற்சி நிறுவனம் (ITI) மற்றும் பல்தொழில்நுட்ப பயிற்சி (Polytechnic)	1250	1750	1450	1950
2.	கவின்கலை, ஆசிரியர் பயிற்சி மற்றும் செவிலியர் பட்டயப்படிப்பு (Diploma in Find Arts, Teacher Education and Nursing) (ஆண்டொன்றுக்கு)	1250	1750	1450	1950
3.	இளங்கலை பட்டப்படிப்பு (Bachelor Degree) மற்றும் கவின் கலையில் இளங்கலைப் பட்டம், ஆசிரியர் பயிற்சி மற்றும் செவிலியர் பட்டப்படிப்பு (Bachelor Degree in Fine Arts, Teacher Education and Nursing) (ஆண்டொன்றுக்கு)	1750	2250	2000	2500
4.	முதுகலை பட்டப்படிப்பு (Post Graduate) மற்றும் கவின் கலை மற்றும் செவிலியர் முதுகலை பட்டப்படிப்பு (Post Graduate Degree in Find Arts and Nursing) (ஆண்டொன்றுக்கு)	2250	2750	3250	3750
5.	சட்டம், பொறியியல், மருத்துவம், கால்நடை அறிவியில் வேளாண்மை அல்லது அது தொடர்பான பாடங்களில் தொழிற்கல்வி (Professional Courses) (ஆண்டொன்றுக்கு)	2250	2750	4250	4750
6.	முதுநிலை தொழிற்கல்வி (Post Graduate Professional Courses) (ஆண்டொன்றுக்கு)	4250	4750	6250	6750

Verified RealEstate™